செங்கோட்டை நகராட்சி

அவசரக்கூட்டம்

செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் 2025ம் ஆண்டு மார்ச் 21ஆம் நாள் (21.03.2025) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற இருக்கின்றது. எனவே துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மன்றப்பொருள் 1

செங்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சுப்பிரமணியபுரம் கலவை உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.192/2025/SBM-1 நாள்.10.01.2025ன்படி அதன்படி மத்திய அரசு மான்யம் ரூ.383.00 இலட்சம், மாநில அரசு மான்யம் ரூ.252.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.130.00 இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்படி நகராட்சி பங்குத் தொகை ரூ.130.00 இலட்சம் பொது நிதியில் செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 28.02.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | சுப்பிரமணியபுரம் கலவை உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் புதியதாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க | 765.00 | திரு.K.ராஜா முகம்மது ஒப்பந்த ஒப்பந்த மதிப்பை விட 0.01% குறைவு |
| | | | திரு.K.நிஸார் ஒப்பந்த மதிப்பை விட 3.00 % அதிகம் |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. K.ராஜா முகம்மது என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.130.00 இலட்சம் வருவாய் மூலதன நிதி மூலம் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.201/2024/இ1)

மன்றப்பொருள் 2

செங்கோட்டை நகராட்சியில் வெளிக்கொணர்வு முறையில் சுகாதாரப்பணி மேற்கொண்டு வந்த ராம்&கோ நிறுவன பணியாளர்கள் 5 நபர்கள் மூலம் குடிநீர் பணி செய்து வந்த நிலையில் மேற்படி நிறுவனம் 15.11.2024ல் துப்புரவு பணியில் இருந்து விலகிய நிலையில் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகத்தின் அவசர, அவசியம் கருதி 7 பணியாளர்களை 1.04.2025 முதல் 31.03.2026 வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் பணியில் அமர்த்தி சீரான குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் பணி மேற்கொள்ள மதிப்பீட்டு செலவீனம் ரூ14.20/- இலட்சத்திற்க்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Scanned with OKEN Scanner

அலுவலக குறிப்பு :

1. குடிநீர் பணிகள் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது விலை விபரபட்டியல்படி ஊதியம் வழங்கிட அனுமதிக்கலாம்
3. இச்செலவினம் குடிநீர் நிதி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றபொருள் 3

இந்நகராட்சி சாலையோர வியாபாரிகளிடம் கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமத்திற்கு 31.01.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடைபெற்றது. மேலும் பொது ஏலத்தில் 3 நபர்கள் கலந்து கொண்டனர், ஒப்பந்தபுள்ளியில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது. கீழ்க்கண்ட விபரப்படி

| வ,எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகைதாரர் கோரிய உட்சபட்ச ஏலத் தொகை | உட்சபட்ச ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.C அங்கராஜ்,<br>த/பெ செல்லச்சாமி<br>வீனஸ் தெரு, வல்லம் | ரூ.2,03,000/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 2. | திரு.பி.ஐயப்பன்,<br>த/பெ பூதத்தான்<br>5/194 எம்.ஜி.ஆர் நகர் வல்லம் | ரூ.2,02,000/- | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை |
| 3. | திரு.லெ.சுப்பிரமணியன்,<br>த/பெ லெட்சுமணன்<br>நீராத்திலிங்கம் தெரு,<br>செங்கோட்டை | ரூ.1,90,000/- | ரூ.2,57,000/- |
| 4. | திரு.லெ.முத்துமாரியப்பன்<br>த/பெ லெட்சுமணன்,<br>4/17 தேவர் தெரு<br>விஸ்வநாதபுரம்,<br>செங்கோட்டை | பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை | ரூ.2,60,100/- |

பட்டியல் கண்ட விபரப்படி ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச தொகை ரூ. 2,60,100./- திரு லெ. முத்துமாரியப்பன் என்பவர் ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளார். ஆகையால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி எதிர்த்து திரு.பூ.ஐயப்பன் என்பவர் குத்தகை விதிகளுக்குட்பட்டு 24 மணி நேரத்திற்குள் உச்சபட்ச ஒப்பந்தப்புள்ளியில் 25% அதிகமான தொகைக்கு ஏலம் கோரி நகராட்சி கருவூலத்தில் 04.02.2025 அன்று ரூ.3,25,150/- செலுத்தி நேரடி போட்டிக்கு திரு.ஐயப்பன் விண்ணப்பம் செய்துள்ளார் எனவே, கடந்த 07.02.02025ல் மறு ஏலம் நடத்தப்பட்டதில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டனர்

| வ,எண் | குத்தகைதாரர் பெயர் | நேரடி போட்டி ஏலக் கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.C அங்கராஜ்,<br>த/பெ செல்லச்சாமி<br>வீனஸ் தெரு, வல்லம் | ரூ.3,57,000 |
| 2. | திரு.பி.ஐயப்பன்,<br>த/பெ பூதத்தான்<br>5/194 எம்.ஜி.ஆர் நகர்<br>வல்லம் | ரூ.3,59,000 |
| 3. | திரு.லெ.சுப்பிரமணியன்,<br>த/பெ லெட்சுமணன் | ரூ.3,58,000/- |

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| | நீராத்திலிங்கம் தெரு,<br>செங்கோட்டை | |
| 4. | திரு.லெ.முத்துமாரியப்பன்<br>த/பெ லெட்சுமணன்,<br>4/17 தேவர் தெரு<br>விஸ்வநாதபுரம், செங்கோட்டை | ரூ.3,60,000/– |

எனவே, பட்டியலில் கண்டவாறு நேரடி ஏலப் போட்டியில் அரசு மதிப்பை விடவும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பை விடவும் உட்சபட்ச நேரடி போட்டி ஏலக் கேள்வி ரூ.3,60,000/– கூடுதலாக திரு.லெ.முத்துமாரியப்பன் என்பவர் ஏலக் கேள்வி கோரியுள்ளதால் மேற்படி குத்தகை உரிமத்தினை 01.04.2025 முதல் மூன்று நிதியாண்டிற்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

(ந.க எண் : 3090/2015/அ1)

மன்றம் அனுமதிக்கலாம்.

இடம் : செங்கோட்டை நகர்மன்றத் தலைவர்

நாள் : 19.03.2025. செங்கோட்டை நகர்மன்றம்

நகல் :

1. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள்,தென்காசி பாராளுமன்றம்.
2. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம், கடையநல்லூர்.
3. அனைத்து பத்திரிக்கை நிருபர்கள்

ஆணையாளர்/பொறியாளர்/மேலாளர் மேஜைக்கு

நகல் : பொதுப்பணி மேற்பார்வையாளர்/துப்புரவு ஆய்வாளர்/வருவாய் ஆய்வாளர்/ நகரமைப்பு ஆய்வாளர்

Scanned with OKEN Scanner